**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Gobar Gas plant Scheme has become popular and many ryots are trying to introduce it. It requires a lot of money and cattle heads. Unfortunately, in the border areas cattle are being sent to nearby slaughter houses. May I know from the Hon. Minister for Hindu Religious Endowments whether any scheme will be introduced to stop sending of cows to slaughter houses in future?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றி யோசிக்கலாம்.

*Flushout latrines in Town Panchayats*

***45** *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether a comprehensive scheme of converting dry latrines into flushout latrines in the Town Panchayats in the State, is under the consideration of the Government; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** (அ) & (இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சில நகராட்சி நகரங்களில் ஆராய்ச்சி செயல் திட்டத்தின் கீழ் ரூ. 1.20 லட்சம் செலவில் 1973-74 நிதி ஆண்டில் ஒரு சோதனை ஏற்பாடாக 1,000 திறந்த வெளிக் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்ற சமூக நலத்துறையால் 19—2—1974 நாளிட்ட 114-ம் எண்ணில் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மேற்படி திட்டம் 1974-75 நிதி ஆண்டில் ரூ. 5 லட்சம் செலவில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மேலும் சில பேரூராட்சிகளிலும் தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, பல இடங்களிலே நகரப் பஞ்சாயத்துக்களிலேயும் சரி, நகர மன்றங்களிலேயும் சரி, கழிப்பிடங்கள் சரிவர சுத்தம் செய்யப்படாததால் சுகாதாரக் கேடுகளுக்கு இடமாக இருக்கின்றனவே, இதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன அவசர நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது?

1975 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** 1973-74 ஆம் ஆண்டில் ஒரு உத்தரவு போட்டு பூவிருந்தவல்லியில் 300-ம், வில்லிவாக்கத்தில் 300-ம், திருத்தணியில் 200-ம், வாலாஜாபாத்தில் 200-ம் 1.53 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் இதே திட்டத்தை விரிவுபடுத்துகின்ற முறையிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே வில்லிவாக்கம், பூவிருந்தவல்லி ஆகிய இடங்களிலும் மதுரை மாவட்டத்தில் வத்தலக்குண்டு, சோழவந்தான், நத்தம், நிலக்கோட்டை ஆகிய இடங்களிலும் தஞ்சாவூர் மாவட்டத்திலே அய்யம்பேட்டை, பாபநாசம், திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு ஆகிய இடங்களிலும் ஏற்படுத்த அரசு செயல்படும்.

**திரு. செ. அரங்கநாயகம் :** வெளிக் கழிப்பிடங்கள், நீராடிக் கழிப்பிடங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்கின்ற ஒரு தொழில் ஜாதி அடிப்படையிலே நடைபெற்று வருகிறது. அதன் காரணமாக அந்த குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் தாழ்ந்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்தப் பணி சமுதாயப் பணி என்ற முறையில் அந்தத் தொழிலிலே எல்லா ஜாதியைச் சேர்ந்தவர்களும் பாகுபாடு இல்லாமல் ஈடுபடக்கூடிய முறையில் அவர்களுடைய சம்பளத்தை மாதம் 500 ரூபாய் என்று ஆக்கி வேறு ஜாதிக்காரர்களும் ஈடுபடக்கூடிய அளவிலே அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** சென்ற ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொழிலைச் செய்கிற அந்த மக்களுக்கு—தலையிலே அவர்கள் மலத்தைத் தூக்கிக்கொண்டு போகிற நிலைமை, கையால் எடுக்கக்கூடிய நிலைமை, காலணியில்லாமல் இருக்கக்கூடிய நிலைமை இவையெல்லாம் இருக்காத அளவிற்கு—பல்லாயிரக்கணக்கான கருவிகளை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் படிப்படியாக மாற்றப்படுகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ப்ளஷ் அவுட் கக்கூஸ்களை மேஜர் பஞ்சாயத்துக்களில் மட்டும்தான் ஏற்படுத்த வேண்டுமென்று இல்லாமல் அநேகமாக எல்லா பஸ்டாண்டுகளிலும் பார்த்தால் சுத்தம் செய்யப்படாமல் ஆரோக்கியக் குறைவான நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கேயாவது உடனடியாக எல்லா இடங்களிலும் அவைகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** அதைப்பற்றி அரசு ஆராய்ந்து ஆவன செய்யும்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** சமூக நலத்துறையும் சுகாதாரத் துறையும் இரண்டும் ஒன்றுசேர்ந்து 16 லட்சம் ரூபாய் செலவில் பல இடங்களிலே கழிப்பிடங்கள் கட்டவேண்டுமென்று ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்ததே, அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா? எப்போது அந்தத் திட்டம் நிறைவேறும்?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** இது பேரூராட்சிகளிலே அமல்படுத்தப்படுமா என்ற கேள்வி, பேரூராட்சிகள் பற்றிய விவரங்கள் தற்போது உள்ளன. பொதுவாக விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** படிப்படியாக அரிசன மக்களுக்கு இந்தத் தொழிலிலிருந்து விடுதலை கிடைக்கச் செய்யவேண்டுமென்பதுதான் திட்டம். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தனியாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? டவுன் பஞ்சாயத்துக்களிலே போதுமான பண வசதி கிடையாது, வரவுக்கும் செலவிற்கும் சரியாக இருக்கிறது, லெட்ரின்கள் கட்டுவதற்குத் தேவையான பணம் அவைகளிடத்திலே இல்லை. அப்படியே கட்டினாலும் சுத்தம் செய்வதற்கு வழிகள் இல்லை. ஆகவே டவுன் பஞ்சாயத்துக்களுக்கு இவ்வளவு பணம் என்று ஒதுக்கி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தங்களுடைய கேள்வி பேரூராட்சிகளைப் பற்றித்தான். வேறு யோசனைகள் இருந்தால் அவர்கள் எழுதி அனுப்புவார்களானால் அதைப் பரிசீலிக்க வழிவகை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]